


தி.மு.க. 75 அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக வள்ளுவர் கோட்டத்தில், சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி2025 நடைபெற்று வருகிறது. 11.11.2025 அன்று மாலை நேர நிகழ்ச்சியாக `புதுகை பூபாளம் கலைக்குழு'வின் அரசியல் நையாண்டியும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளரும், நாகை சட்டமன்ற உறுப்பினருமான ஆளூர் ஷா நவாஸ் அவர்களின் உரைவீச்சும் நடைபெற்றன. வாசகர்களும், பொதுமக்களும், ஆர்வத்துடன் பங்கேற்று நிகழ்வுக்கு வரவேற்பளித்தனர்.



சென்னை முற்போக்கு புத்தகக் காட்சி #திமுக75 வரலாற்றுப் புகைப்பட கண்காட்சி மாலை நேர கலை இலக்கிய நிகழ்வுகள் என தொடர் நிகழ்வுகளுக்கு வருகை தந்து, நம் முயற்சிகளுக்கு மக்கள் பெருவாரியான ஆதரவை வழங்கி வருகிறார்கள். நேற்றைய தினம் கோவன் கலை குழுவினர் #SIR , மதவாத அச்சுறுத்தல், ஆணவ கொலைகள் ஆகியவற்றை ஒன்றிணைந்து எதிர்க்கவேண்டியதன் அவசியத்தைப் பாடலாகப் பாடி, மக்களிடையே விழிப்பு உணர்வை ஏற்படுத்தினர். திரைப்பட இயக்குனர் கரு பழனியப்பன் அவர்களும் வரலாற்றை வாசிக்க வேண்டியதன் அவசியத்தை முத்தமிழறிஞரின் பதிப்பகத்தின் `காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூலை கையிலேந்தி எடுத்துரைத்தார்.

## தமிழ்நாட்டு மக்களுடைய வாக்குரிமையைப் பறிக்கின்ற பா.ஜ.க. அரசிற்கு துணை போகின்ற

# அ.தி.மு.கவிற்கு இதுதான் இறுதி தேர்தலாக இருக்கும் என்பதை உணர்த்திட செய்வோம்!

## கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி பேச்சு!

கோவை, நவ. 14 -

தமிழ்நாட்டு மக்களுடைய வாக்குரிமையை பறிக்கின்ற பா.ஜ.க. அரசிற்கு துணை போகின்ற அ.தி.மு.கவிற்கு இதுதான் இறுதி தேர்தலாக இருக்கும், அது கோவையிலும் இறுதி தேர்தலாக இருக்கும், என்பதை நாம் இந்த தேர்தலே உணர்த்திட வேண்டும் என்று கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கூறினார்!



கூட்டத்தில் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது :-

தமிழ்நாட்டில் தேர்தல் ஆணையத்தால், ஒன்றிய அரசால் முன்னெடுக்கப் பட்டிருக்கின்ற இந்த எஸ்.ஐ.ஆர். வாக்காளர் பட்டியலுடைய இந்த சிறப்பு திருத்தத்திற்கான எதிர்ப்பை பதிவு செய்யக்கூடிய வகையில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற அனைத்து கட்சி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மிக பிரம்மாண்டமாக தமிழ்நாடே வியந்து பார்க்கக்கூடிய அளவிற்கு, டெல்லியில் இருக்கக்கூடிய தேர்தல் ஆணையத்தின் காதுகளில் ஒழிக்கக்கூடிய அளவிற்கு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் கோவை ஒருங்கிணைந்த மாவட்டத்தின் சார்பாக நடைபெறுகின்ற சிறப்பு வாய்ந்த இந்த எஸ்.ஐ.ஆருக்கு எதிரான மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான கழக நிர்வாகிகளுக்கும், தோழமை கட்சியினுடைய நிர்வாகிகளுக்கும் நன்றியை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

### குறுக்கு வழியில் அடக்கு முறை!

இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களில் இந்த எஸ்.ஐ.ஆர். குறித்து முதலில் தன்னுடைய எதிர்ப்பை பதிவு செய்தவர் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள். வாக்களிப்பது நம்முடைய உரிமை, அந்த உரிமையை ஒன்றிய பா.ஜ.க. அரசு தேர்தல் ஆணையத்தின் மூலமாக பறிப்பதற்கான முயற்சியை முன்னெடுத்திருக் கின்றார்கள். ஒரு கட்டத்தில் ஐடி, ஈடி அப்புறம் சிபிஐ இதையெல்லாம் தமிழ்நாட்டிலே உள்ளே கொண்டு வந்து குறுக்கு வழியில் அடக்கு முறையை ஏவி ஆட்சியை பிடிக்க நினைத்த பா.ஜ.க. அதில் தோல்வியை கண்டது, காரணம் இது திராவிட மண், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆளக்கூடிய திராவிட மண், சரி ஐடி, ஈடி, சிபிஐயால் முடியாததை வேறு எதை வைத்து சாதிக்கலாம் என்று நினைத்த பா.ஜ.க. ஒன்றிய அரசு இப்பொழுது தேர்தல் ஆணையத்தை கையிலே எடுத்து, பீகாரை போல தமிழ்நாட்டில் லட்சக்கணக்கான வாக்காளர்களை, உரிமையுள்ள வாக்காளர்களை நீக்குவதற்கான பணியை முன்னெடுத்திருக்கின்றார்கள்.

நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களும், தோழமை கட்சி தலைவர்களும் தொடர்ந்து வலியுறுத்துவது, இந்த தேர்தல் ஆணையம் ஏன் இந்த அவசர கோலத்தில் இப்படி இந்த முன்னெடுப்பை எடுத்திருக்கின்றார்கள். 30 நாட்களில் ஏறத்தாழ 7 கோடி வாக்காளர்களுக்கு படிவங்களை கொடுத்து அதை பூர்த்தி செய்து திரும்ப பெற்று அதை ஆன்லைனிலே ஏற்றி, இறுதி வரைவு வாக்காளர் பட்டியல் வரும் என்று சொன்னால் நிச்சயம் இது முடியாது என்பது அனைவருக்கும் தெரியும், தேர்தல் ஆணையத்திற்கும் இது தெரியும், தெரிந்தும் கூட இது போன்ற முன்னெடுப்பை தேர்தல் ஆணையம் எடுத்திருக்கின்றன. ஏறத்தாழ பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டார்கள்.

தேர்தல் ஆணையம் சொல்லுகிறது, நீக்கப்பட்ட வாக்காளர்களை நீங்கள் மேல்முறையீடு செய்து உரிய ஆவணங்களை கொடுத்து சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னால் அந்த மேல் முறையீட்டின் மூலம் பீகாரில் மீண்டும் 3 லட்சம் வாக்காளர்களை நீக்கி இருக்கின்றார்கள். இப்படி 68 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்ட பீகாரில் கூடுதலாக சேர்க்கப்பட்ட வாக்காளர்கள் 21 லட்சம் பேர், சரி அந்த 68 லட்சம் வாக்காளர்களில் எவ்வளவு பேர் மீண்டும் சேர்க்கப்பட்டார்கள் என்று சொன்னால் 90% வாக்காளர்கள் மீண்டும் தேர்தல் ஆணையத்தால் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படாத ஒரு நிலை அங்கே உருவாகி இருக்கின்றன.

அந்த நிலையை தமிழ்நாட்டில் உருவாக்குவதற்கு பி.ஜே.பி அரசு தேர்தல் ஆணையத்தின் மூலமாக முன்னெடுத்திருக்கின்ற இந்த எஸ்.ஐ.ஆரை பொறுத்தவரை நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் தொடர்ந்து எதிர்ப்பை தெரிவிப்பதோடு, அதில் இருக்கக்கூடிய குளறுபடிகளை, அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய சிரமங்களை, அதனால் மக்கள் படுகின்ற இந்த இன்னல்களை எல்லாம் எடுத்துரைத்து இருக்கின்றார்கள். பொதுவாக தேர்தல் ஆணையம் இதை காதிலே வாங்குவதில்லை, வட இந்தியாவில் குறிப்பாக பீகார் போன்ற மாநிலங்கள் எல்லாம் நீக்கப்பட்ட வாக்காளர்களுக்கு ஆட்சேபணை எனசொல்லலாம் என்று சொன்னால் எதிர்க்கட்சிகள் அங்கே ஆட்சேபணைகளை தெரிவித்த பொழுது மீண்டும் சொன்னார்கள், அவர்கள் உரிய படிவத்தில் பூர்த்தி செய்யவில்லை, வெள்ளை காகிதத்தில் எழுதி கொடுத்தார்கள் என்று ஒரு மாற்று கருத்தை முன்வைக்கின்றார்கள்.

இப்படியாக எல்லா ஆவணங்களிலும் ஆதாரை இணைக்க வேண்டும் என்று சொல்லுகின்ற ஒன்றிய அரசு, இந்த வாக்காளர் அடையாள அட்டையுடன் சேர்த்து வாக்காளர் பட்டியலோடு ஆதாரை இணைப்பதற்கு எதிர்ப்பை தெரிவிக்கின்றார்கள். நீதிமன்றத்திற்கு சென்று உச்ச நீதிமன்றத்தின் உத்தரவு மூலமாக ஆதாரையும் சேர்த்துக் கொள்ளலாம் என்ற உத்தரவுகளை பெறக்கூடிய நிலைக்கு இன்றைய ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டு மக்களை தள்ளி இருக்கின்றன.

### நாம் கவனமாக இருக்க வேண்டும்!

நாம் கவனமாக இருக்க வேண்டும், இங்கு பேசிய நம்முடைய தோழமை கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் சொன்னதை போல நாம் கவனமாக இருக்க வேண்டும். வாக்களிப்பது நம்முடைய உரிமை!, நம்மை யார் ஆள வேண்டும் என்பதை தீர்மானிப்பது நம்முடைய கடமை!, ஆகையால் தமிழ்நாட்டை ஆளக்கூடிய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கி இருக்கின்ற பல்வேறு சிறப்பு திட்டங்கள் நல்லாட்சிக்கு கிடைத்திருக்கின்ற இந்த சான்றுதல் என்பது வரக்கூடிய 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் வென்று விடக்கூடாது என்பதற்காக குறுக்கு வழியில் பா.ஜ.க. இந்த முன்னெடுப்பை எடுத்திருக் கின்றனர், அவர்களுக்கு அடிமையாக இருக்கக்கூடிய அ.தி.மு.க. எனக்கு தெரிந்தவரை இந்தியாவில் பி.ஜே.பி.யோடு எத்தனையோ தோழமை இயக்கங்கள் இருக்கின்றன, அவர்கள் எல்லாம் கூட இந்த எஸ்.ஐ.ஆரை பொறுத்தவரை அவர்கள் சொல்லுவது பல்வேறு திருத்தங்களை சொல்கின்றார்கள், இதையெல்லாம் இதிலே சரி செய்ய வேண்டும் என்று அவர்கள் தோழமை இயக்கத்திலே, கூட்டணி அரசிலே இடம் பெற்றவர்கள் கூட அந்த கருத்துக்களை சொல்கின்றார்கள்,

ஆனால் கண்ணை மூடிக்கொண்டு இந்த எஸ்.ஐ.ஆரை அடிமை அ.தி.மு.க. எடப்பாடி பழனிச்சாமி ஆதரிக்கிறார் என்று சொன்னால் இதைவிட ஒரு கேடுகெட்ட நிலைமை தமிழ்நாட்டில் இனி எக்காலத்திலும் வராது, அடிமையாக இருந்து கொண்டு நாட்டை அடமானம் வைத்ததை போல இன்று தமிழ்நாட்டு மக்களுடைய வாக்குரிமையை பறிக்கின்ற பா.ஜ.க. அரசிற்கு துணை போகின்ற அ.தி.மு.கவிற்கு இதுதான் இறுதி தேர்தலாக இருக்கும், அது கோவையிலும் இறுதி தேர்தலாக இருக்கும், என்பதை நாம் இந்த தேர்தலே உணர்த்திட வேண்டும், அதை நாம் செய்ய வேண்டிய முதல் கடமை, நம்முடைய வாக்குரிமையை வாக்காளர் பட்டியலில் நிலைநிறுத்திட வேண்டும் ஒரே ஒரு கருத்தை சொல்லி நிறைவு செய்கின்றேன்.

### தேர்தல் ஆணையத்தை இயக்கும் பா.ஜ.க.

தேர்தல் ஆணையம் சொல்லுவது நாங்கள் முதலில் வாக்காளர் பட்டியலிலே 2002 2005லே வாக்களித்தவர்களை வாக்காளர் பட்டியலிலே சேர்த்து வரைவு வாக்காளர் பட்டியலிலே வெளியிடுகின்றோம் அதில் பெயர் விடுபட்டால் நீங்கள் முறையீடு செய்து மீண்டும் உங்கள் பெயரை இணைத்துக் கொள்ளலாம் என்று சொல்கின்றார்கள் அதைத்தான் ஒரு கருத்தை சொன்னார்கள். நாங்கள் எந்தவித விசாரணையும் இல்லாமல் உங்களுக்கு தண்டனையை கொடுத்து கொடுத்து விடுகின்றோம், கீழமை நீதிமன்றங்களில் நீங்கள் விருப்பப்பட்டால் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து உங்கள் உரிமையை கேட்டு பெறலாம் என்ற நிலையை தேர்தல் ஆணையம் உருவாக்கி இருக்கின்ற அந்த தேர்தல் ஆணையத்தை இயக்குவது ஒன்றிய பி.ஜே.பி அரசு,

கடந்த 2021ல் ஒரு தொகுதியில் கோவையில் பி.ஜே.பி. வென்றது. இந்த 2026ல் ஒரு தொகுதியில் கூட பி.ஜே.பியும் அ.தி.மு.கவும் வென்று விடக்கூடாது, 10 தொகுதிகளும் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வென்றிட வேண்டும். நம்முடைய கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியினுடைய பொதுச் செயலாளர் சொன்னதை போல வாக்களித்தவர்களுக்கு செய்த நன்மை அளவிற்கு வாக்களிக்காத கோவை மக்களுக்கும் சரித்திர திட்டங்களை தந்தவர் நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்கள். அவிநாசி சாலை மேம்பாலமாக இருக்கட்டும், கடந்த ஆட்சியில் வெறும் 80 கோடி ரூபாய்க்கு வேலை செஞ்சாங்க அவங்களும் இனிப்பு கொடுத்து கொண்டாடுறேன்னு கொஞ்சம் கூட வெட்க இல்லாம, சொல்றாங்க, முழுசா நிதியை கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பணிகளை முடித்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அதிலிருந்த வழக்குகளை எல்லாம் தீர்த்து வைத்து நீதிமன்றத்தில் சென்று வாதாடி நல்ல தலைசிறந்த வழக்கறிஞரை வைத்து வென்று அந்த பாலத்தை முடித்து திறந்து வைத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், பெரியார் நூலகம், செம்மொழி பூங்கா, ஐடி பார்க், சாலை வசதிகளுக்காக சிறப்பு நிதி, தொழில்துறையிலே புரட்சி, தங்க நகை செய்வோர்களுக்கு பூங்கா என கோவை வரலாறு காணாத வளர்ச்சியை அடைவதற்கு இந்த நான்கரை ஆண்டுகளில் முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள். ஒரு எம்.எல்.ஏ., கூட இல்ல நம்ம கிட்ட, 10 எம்.எல்.ஏ., இருந்தா? இரண்டு அமைச்சர் இருந்தா? எந்த அளவிற்கு நம்முடைய மாவட்டம் இன்னும் வளர்ச்சி பெற்றிருக்கும் என்பதை நம்முடைய கோவை மாவட்ட மக்கள் உணர்ந்து பார்க்க வேண்டும், நினைத்து பார்த்திட வேண்டும். அந்த வகையில் வரக்கூடிய 2026 சட்டமன்ற தேர்தலில் கோவையில் 10 தொகுதிகளும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெற்றது என்ற சரித்திர சாதனையை உருவாக்கிட வேண்டும் என்று அனைவரிடத்திலும் அன்போடு கேட்டுக்கொண்டு இந்த எஸ்.ஐ.ஆரை பொறுத்தவரை நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலோடு தோழமை இயக்க தலைவருடைய வழிகாட்டுதலோடு இந்த எஸ்.ஐ.ஆரை ஒன்றிய அரசு செய்கின்ற இந்த முயற்சியை முறியடிப்போம், உரிய வாக்குரிமையை நிலைநாட்டுவோம், அதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவோம் என்று இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலமாக அனைவரிடத்திலும் அன்பான வேண்டுகோளை உங்களிடத்திலே பணிவன்போடு வைத்து இப்பொழுது எழுப்புகின்ற கோஷங்களை அனைவரும் திரும்பச் சொல்லுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் கூறினார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையே தேவை என்று உணர்ந்து குறிச்சி தெற்கு பகுதியைச் சேர்ந்த குறிச்சி மண்டல பி.ஜே.பி. பொதுச் செயலாளர் கே.சுரேஷ், மண்டல துணைத் தலைவர் ஆரோக்கியராஜ், மண்டல துணைத் தலைவர் தீபா, மண்டல செயலாளர்கள் அருண், அரவிந்த், IT மண்டல தலைவர் மணி, இளைஞர் அணி ரஞ்சித் உள்பட 60க்கும் மேற்பட்டோர் கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் கார்த்திகேயன், ஜெகதீஸ்வரன், ஏர்போர்ட் ராஜேந்திரன், பாபுலால், 98 வது வார்டு கழக செயலாளர்கள் குமரேசன், ஜவஹர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர், அத்தாணி சாலையில் நகலூர் பிரிவு முதல் மினியப்பம் பாளையம் நலம் மஹால் வரை 600 மீட்டர் தூரத்திற்கு 1கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் சாலை அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்தும் பணிகளை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் துவக்கி வைத்தார். நிகழ்வில் சேகர், பாபு சரவணன், ரமேஷ், மாதேஸ்வரன், நல்லசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பாபு ஜனார்த்தனன்

**நவம்பர் 14 (1989)**



**பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றினார். பின்னர் தி.மு.க. ஆரம்பித்தவுடன் கழகத்தில் இணைந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பினை பெற்றவர்.**

**1978ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளராக பணியாற்றியவர்.**

**1980ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் செய்யாறு தொகுதியில் போட்டியிட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**